# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 3

FATIMA COLLEGE
LEAD KINDLY LIGHT
MADURAI



## தமிழ் உயராய்வு மையம்

## பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)

### மதுரை - 18

Scanned by CamScanner

# பொருளடக்கம்

## காப்பியம்


| வ. எண் | பெயர் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | திருமதி இலக்கியா, சோ. | இரட்சண்ய மனோகரத்தில் அருள் வாழ்வியலுக்கான மனித மதிப்பீடுகள். | 1 |
| 2. | திருமதி சலோமி இராஜரீகம், சே. | தேம்பாவணியில் மனித மதிப்பீடுகள் | 5 |
| 3. | திருமதி பிரியா, பா. | அருள்நிறை மரியம்மை காவியம் காட்டும் மனிதநெறிகள் | 8 |
| 4. | செல்வி மகேஸ்வரி, வே. | இரட்சணிய யாத்திரிகத்தில் மதிப்புகள் | 12 |
| 5. | மணிப்பிரியா, ரா. | நீர் வரம் அடைந்த படலம் வழி அறியலாகும் மதிப்பீடுகள் | 15 |
| 6. | வசுமதி, சி. | தேம்பாவணியில் நீர் வரம் அமைந்த படலம் | 18 |
| 7. | செல்வி விஷ்ணுபிரியா, சு. | சேதையோன் படலத்தில் இறைமாண்புகள் | 22 |
| 8. | ஜாஸ்மின் பிரியா, மா. | வளன் சனித்த படலத்தில் மனித மதிப்பீடுகள் | 27 |


## சிற்றிலக்கியம்


| | | | |
|---|---|---|---|
| 9. | முனைவர் அருள் மைக்கேல் செல்வி, சி. | கித்தேரியம்மாள் அம்மானை வழி அறியலாகும் வாழ்வியல் மதிப்பீடுகள். | 31 |
| 10. | அல்போன்ஸ் சிந்தியா, அ. | கித்தேரியம்மாளின் மனித மாண்புகள் | 35 |
| 11 | ஆனந்தி, க. | திருக்காவலூர் கலம்பகம் சுட்டும் வாழ்வியல் அறம் | 38 |
| 12. | திருமதி சரஸ்வதி, கு.செ. | கிறித்துவச் சிற்றிலக்கியங்கள் | 42 |
| 13. | முனைவர் சுஜா, ச.அ. | திருக்காவலூர் கலம்பகச் சிறப்பு | 46 |
| 14. | திருமதி திவ்யா, பி. | மடுமாதா அம்மானையில் குடும்பத்திற்கான மதிப்பீடுகள் | 50 |
| 15. | முனைவர் தேவ்மாலா, ஆ. | திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம் | 53 |
| 16. | முனைவர் ஹென்றி ஜுலியஸ், பெ. | கித்தேரியம்மாள் அம்மானையும் அறவியல் பேருண்மைகளும் | 57 |
| 17. | முனைவர் ஷர்மி, ஆ. | கிறித்துவ இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள் | 62 |


Scanned by CamScanner

# திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம்

முனைவர் அ. தேவ்மாலா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பாத்திமா கல்லூரி, மதுரை

தமிழில் தோன்றிய சிற்றிலக்கிய வகையுள் கலம்பக இலக்கியமும் ஒன்று. வாழ்க்கைக்குத் தேவையான நல்ல அறங்களைப் போதிப்பதில் கலம்பக இலக்கியங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. அவற்றுள் வீரமாமுனிவரின் திருக்காவலூர்க் கலம்பகமும் ஒன்று. இலக்கியப் படைப்பாளர்கள் தாங்கள் சார்ந்த சமூகத்தையும் படைப்புகளில் காட்டத் தவறுவதில்லை. திருக்காவலூரில் வீற்றிருக்கும் மரியன்னையின் மீது கலம்பகம் படைத்த வீரமாமுனிவரும் சில நன்னெறிகளைத் தம் படைப்பில் பதிவு செய்து மக்களை நல்வழிப்படுத்த விழைந்துள்ளார். சமுதாய நலன் கருதி வீரமாமுனிவர் கூறியுள்ள அறங்களை ஆராய்ந்து வெளிக்கொணரும் முயற்சியாக இக்கட்டுரை அமைகிறது.

## 'அறம்' சொற்பொருள் விளக்கம்

அறம் என்ற சொல்லுக்குப் பல்வேறு நூல்களும் பலவிதமான பொருள்களைத் தருகின்றன. "மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் முழு நிறை வடிவமே அறம்"[1] என கா.அரங்கசாமி குறிப்பிடுகின்றார். (கா. அரங்கசாமி, தமிழ் கல்வெட்டுகளில் அறவியல் கோட்பாடுகள், ப. 17) "தனி மனிதன், சமூகம், சமயம், அரசு இவற்றிற்கான ஒழுகலாறுகளை 'அறம்'"[2] என ஆ. சண்முகம் சுட்டியுள்ளார். (ஆ. சண்முகம் (ப.ஆ.), எத்தனம் தமிழியல் ஆய்வுகள், ப. 17) "அறிவும் சிந்தனையும் சுய நிருணயமும் அறத்தின் உயிர் நாடிகள்"[3] என்றார் சாக்கிரட்டீஸ் (கலைக்களஞ்சியம், தொகுதி-1, ப. 256) இவை போன்று பல அறிஞர்களும் 'அறம்' என்ற சொல்லுக்குப் பல்வேறு வகையான விளக்கங்களைத் தந்துள்ளனர்.

## திருக்காவலூர்க் கலம்பகத்தில் அறம்

இப்படித்தான் வாழ வேண்டும், மாறினால் சமூகம் சீர்கேடு அடையும் என்ற நோக்கில் தோன்றியவையே வாழும் நெறிகளாகும். இத்தகைய வாழ்வியல் நெறிகளே இலக்கியங்களில் 'அறம்' என்ற பெயரால் வற்புறுத்தப்படுகின்றது. அறச்சிந்தனைகளை வலியுறுத்தும் இலக்கியங்களுள் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்த திருக்காவலூர்க் கலம்பகம் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. குறிப்பாகத் தனிமனித அறம் இக்கலம்பக இலக்கியத்தில் அதிகம் கூறப்பட்டுள்ளது.

## இறைவனை அடையும் நெறி

சாதாரண மனிதன் முதல் நூல் பல கற்ற சான்றோர் வரை யாராக இருந்தாலும், ஆழ்மனதில், புவியுலக வாழ்வு நிறைவடைகின்ற காலத்தில் இறைவனை அடைய வேண்டும் என்ற எண்ணம் மிக ஆழமாகப் பதிந்துள்ளது. அதன் வெளிப்பாடுகள் தான் இலக்கியங்களில் இறைவனை அடைவதற்கான நெறிகளாக வெளிப்படுகின்றன. இல்லற வாழ்வில் அதற்கான அறங்களைக் கடைப்பிடிப்பவர்களே இறைவனடியைச் சேர இயலும் என்பதை இலக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன.

"மீனே தலையரும்ப வெண்மதியே தாளரும்பப்
பானே யுடலரும்பப் பாங்குருவைத் - தானே
ருடைத்தா டிருக்காவலூரகத்து வைத்தா
டுடைத்தாள் வினைத்துயரைத் தொக்கு"[4] (திருக்காவலூர்க்கலம்பகம், ப.34)

எனும் பாடல் ஊழ்வினை காரணமாக வரும் பிறவிக் கடலுள் சிக்கித் தவிக்கின்ற உயிர்கள் கரையேறுவதற்குத் தோணியாக இருப்பது இறைவனின் திருவடிகள் ஆகும். உயிர்களின் துன்பம் நீங்க இறைவனின் மேல் பற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

"மகிழா ருலகி னணுகார் கதியின்
மடிவார் துயரி லருளா ருன்றாட்
புகழா தவரே பணியாதவரே
புடைநீ காவா துய்யா வுயிரே"[5] (தி.கா.க., ப. 18)



Scanned by CamScanner